வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 23.01.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 23 பக்கங்கள் : 08

## காணாமல் போனோர் பணிமனைக்கு கிடைத்த

# 11 ஆயிரம் முறைப்பாடுகளும் 2 ஆண்டுகளில் விசாரிக்கப்படும்

### நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார



வவுனியா, ஜன. 23

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் காணாமல் போனோர் பணிமனைக்கு 11 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பான விசாரணைகள் அடுத்த இரு ஆண்டுகளுக்குள் நிறைவடையும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்சன நாணயக்கார.

நேற்றைய தினம் வவுனியாவில் காணாமல் போனோர் பணிமனையின் அதிகாரிகளுக்கு பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இதன் முடிவில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போனோர் பணிமனை பெறும் முறைப்பாடுகளை முறையாக விசாரிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முக்கிய காரணம், இந்தப் பணிமனையிலுள்ள பிரச்னை அல்ல, அப்போதைய அரசியல் சூழ்நிலை. காணாமல் போனோர் பணிமனையில் போதுமான ஊழியர்கள் இல்லாததால் 65 அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தப் பணிமனையின் விசாரணைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க 37.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர்

07

## கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக போராட்டங்கள்

### சகல கட்சிகளுக்கும் தமிழ் அரசு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

"தமிழரின் இனப்பரம்பலையே மாற்றியமைக்கும் கிவுல் ஓயாத் திட்ட அமுலாக்கலைத் தடுக்கும் வகையில் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளோம். இந்தப் போராட்டங்களில் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு மற்றைய கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறோம்", இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது இலங்கைத் தமிழ் அரசு கட்சி.

அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வியாழக்கிழமை விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"கடந்த திங்கட்கிழமை 20ஆம் திகதி அமைச்சரவை, கிவுல் ஓயாத் திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் எப்படியாக இனப் பரம்பலை மாற்றி அமைக்கும் என்றும் தமிழ் மக்களின் உரிமைகளை எந்தளவுக்கு பாதிக்கும் என்பதையும் எமது பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் நேற்று (நேற்று முன்தினம்) பாராளுமன்றத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்தத் திட்ட

07

## அரசமைப்பு பேரவையிலிருந்து சிறீதரன் பதவி விலகவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 23

அரசமைப்பு பேரவையில் சிறுபான்மை அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீதரன் எம். பி. அரசாங்கத்துக்கு சார்பாக செயல்படுகிறார். இராணுவ அதிகாரிகளின் நியமனத்துக்கும் இணக்கம் தெரிவித்து வடக்கு மக்களின் உரிமைகளை அவமதித்துள்ளார். ஆகவே, அரசமைப்பு பேரவையிலிருந்து சிறீதரன் உடன் பதவி விலக வேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்

07

## அரச மருத்துவ அதிகாரிகள் இன்றுமுதல் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜன. 23

நாடளாவிய ரீதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் 48 மணி நேர அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மருத்துவ அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் இலவச சுகாதார சேவையைப் பாதுகாப்பதற்கும் எட்டப்பட்ட ஒப்பந்தங்களை சுகாதார அமைச்சு செயல்படுத்தத் தவறியமையாலேயே இந்தப்

07

## வட, கிழக்கில் இன்றுமுதல் கனமழை கிடைக்கப்பெறும்

### விவசாயிகளை அவதானமாக செயல்பட அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 23

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மிதமானது முதல் கன மழை வரை கிடைக்கப்பெறும் என்று வானிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள

07

## யாழ். போதனா மருத்துவமனை தேசிய மருத்துவமனையாகிறது

### பாராளுமன்ற சுகாதார மேற்பார்வை குழுவில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தற்போதைய சேவைகள் - எதிர்காலத்தில் விரிவுபடுத்த வேண்டிய சேவைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடந்த பாராளுமன்ற சுகாதார மேற்பார்வை குழுவின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் கூட்டம்

07

## 'அனகொண்டா' திரைப்படத்துடன் ஒப்பிட்டு எதிர்க்கட்சிமீது விமர்சனம்

கொழும்பு, ஜன. 23

எதிர்க்கட்சி முன்னெடுத்து வரும் அரசியல் நகர்வுகளை பிரபலமான அனகொண்டா திரைப்பட வரிசைகளுடன் ஒப்பிட்டு பிரதி அமைச்சர் நளின் ஹேவகே பேசியமை சபையில் சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியது.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட நடவடிக்கை கள் தோல்வியடைந்தன. அரசாங்கம் அந்த வேதன உயர்வைச் சரியாக

07

## மண்மேடு சரிந்து மூவர் பலி!

கொழும்பு, ஜன. 23

கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள்மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் மூவர் உயிரிழந்தனர்.

காலி - அஹங்கம - பெலெஸ்ஸ பகுதியில் நேற்று

07

## திருமலை புத்தர் சிலை விவகாரம்: தேரர்களின் மனுக்கள்மீது வரும் 30ஆம் திகதி தீர்ப்பு!

கொழும்பு, ஜன. 23

திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு தேரர்களின் மனுக்கள் மீதான தீர்ப்பு எதிர்வரும் 30ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் 4 பிக்குகள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு

07

## சர்வதேச சட்ட மாநாடு நாளை யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை இந்தியாவின் சுரானா சட்ட நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் சர்வதேச சட்ட மாநாடு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

3ஆவது முறையாக நடைபெறவுள்ள இந்த சர்வதேச மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை நடைபெறும்.

07

## சைக்கிளிலிருந்து தடுமாறி விழுந்த முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 23

சைக்கிளிலிருந்து நிலைதடுமாறி விழுந்து முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

தெல்லிப்பழையை சேர்ந்த கதிரன் ஐயாத்துரை (வயது 73) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வீட்டிலிருந்து சைக்கிளில் சென்ற முதியவர் ஒழுங்கையிலிருந்து பிரதான வீதியான காங்கேசன்துறை வீதியில் ஏற முயன்றுள்ளார். அப்போது பிரதான வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வந்த நிலையில் அவர் நிலைதடுமாறி விழுந்து

07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மருத்துவமனையின் அத்தியட்சகருக்கு எதிராக விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 23

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகரின் நடவடிக்கைகளில் பல்வேறு முறைகேடுகள் காணப்படுவதாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேற்கொண்ட முறைப்பாடுகளுக்கு அமைய வடக்கு ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசேட விசோரணை குழு இரு நாட்களாக விசாரணைகளை முன்னெடுத்தது.

நேற்று வியாழக்கிழமையும் நேற்று முன்தினம் புதன்கிழமையும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

மருத்துவமனை வாகனங்கள், எரிபொருள் பயன்பாடு மருத்துவ சேவை உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரியவருகிறது.

இதனிடையே, சில அரசியல் தலையீடுகள் காரணமாக விசாரணை முடிவுகளின் அடிப்படையிலான நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்படக்கூடும் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அதிகாரி ஒருவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (ஐ)

# நெடுந்தீவு இறங்குதுறையை புரமைக்க நெதர்லாந்து ஒத்துழைக்க வேண்டும்

## அந்த நாட்டு தூதுவரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 23

நெடுந்தீவுக்கான சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. அங்குள்ள மக்கள், சுற்றுலாவிகளின் நலன் கருதி, நெடுந்தீவு இறங்குதுறையைப் புனரமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதற்கு நெதர்லாந்து அரசாங்கம் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண ஆளுநரை இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் வீபே டி போர் நேற்று முன்தினம் சந்தித்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் உறுதியளித்துள்ளமை வடக்கின் அபிவிருத்திக்குச் சாதகமான சமிக்ஞை என்று தூதுவர் சுட்டிக்காட்டினார் என்றும் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(ஐ)

# வலி. வடக்கில் 2,500 ஏக்கர் காணி இன்னமும் விடுவிக்கப்படவில்லை

## தவிசாளர் சுகிர்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

வலி. வடக்கு பிரதேசத்தில் சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்தப் பகுதி மக்கள் துன்ப, துயரங்களுடன் சுமார் 36 வருடங்களாக தமது சொந்த மண்ணில் வாழமுடியாமல் உள்ளனர் என்று வலி. வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்துக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோ அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட 4 உப அலுவலகங்களுக்கும் ஒவ்வொரு நூலகங்கள் உண்டு. ஏனைய மூன்று நூலகங்கள் அதற்குரிய இடங்களில் சிறப்பாக இயங்கினாலும் மயிலிட்டி உப அலுவலகத்துக்கு உட்பட்ட நூல் நிலையமானது வயாவிளான் சந்தியில் இன்றளவும் விடுவிக்கப்படாமல் உள்ளது.

உயர் பாதுகாப்பு வலயமாக தற்போது உள்ள 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் அதிக நிலப்பரப்பு மயிலிட்டி உப அலுவலகத்துக்கு உட்பட்டதாகும். வயாவிளான் வீதியூடாகப் பயணிக்க முடிந்தாலும் வயாவிளான் சந்தியிலுள்ள நூல்நிலைய காணிக்குள் செல்லமுடியாத நிலை உள்ளது - என்றார். (ஐ)

# ஆழியவளையில் கைக்குண்டு மீட்பு



வடமராட்சி, ஜன. 23

வடமராட்சி கிழக்கு - ஆழியவளையில் மணியளவில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆழியவளை, செம்மண் வீதி அருகாமையில் உள்ள சிறிய பற்றைக் காட்டுப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்தக் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட கைக்குண்டை புலனாய்வு துறையின்ர் பாதுகாப்பான முறையில் அகற்றி மேலதிக விசாரணைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-05)

# மறவர்குள வாய்க்கால் குறித்து யாழ். மாநகர முதல்வர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 23

கொய்யாதோட்டம் பழைய பூங்கா வீதியில் உள்ள மறவர் குளத்தின் நீர் வாய்க்காலின் அணைக்கட்டை உடைத்து பாலம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் யாழ். மாநகர முதல்வர் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தார்.

மாநகர சபையிடம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் பெறப்பட்ட அனுமதிக்கு அமைவாக தனியார் ஒருவர் அங்கு அமைக்கவுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்காக பாலம் அமைப்பதற்காக குளத்தின் வாய்க்கால் சுவர் அழிக்கப்பட்டது.

இதனால், குளத்தின் பாதுகாப்பு அல்லது வாய்க்காலின் பாதுகாப்பு பாதிக்கப்படும் என்று அந்தப் பகுதி மக்கள் மாநகர யாழ். சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இதையடுத்தே, மாநகர முதல்வர் தலைமையிலான குழுவினர் அந்தப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது, குளத்தின் வாய்க்கால் பாதுகாப்பு சுவரை அமைத்த பின்னர் ஏனைய பணிகளை முன்னெடுக்குமாறு காணி உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், பாலத்தின் கட்டுமானம் தொடர்பில் யாழ். மாநகர சபையின் ஆலோசனைகளை பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டது. (ஐ)



# குடமுருட்டி விபத்தில் மூன்று பேர் காயம்!

கிளிநொச்சி, ஜன. 23

வேகக்கட்டுப்பாட்டை இழந்து வான் விபத்துக்கு உள்ளானதில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை பரந்தன் - பூநகரி வீதியில் குடமுருட்டி பாலத்தில் மோதியே வான் விபத்துக்கு உள்ளானது.

இதில், வானில் பயணித்த மூவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-05)



# திறப்பு விழா!

தென்மராட்சி, ஜன. 23

தென்மராட்சி மீசாலை வடக்கு நகுலன் சனசமூக நிலையம், நளினி முன்பள்ளி ஆகியவற்றின் கட்டட திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் மகாலிங்கம் மதுசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ-02)

# சமுர்த்தி வங்கியில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 23

திருநெல்வேலி சமுர்த்தி வங்கியின் தைப்பொங்கல் விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் ஏ. யசோதா தலைமையில் நடைபெற்ற இந்த பொங்கல் விழாவில் திருநெல்வேலி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் என். உதயதரன், திருநெல்வேலி சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டு சபையினர், கிராமமட்ட அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-05)




# திணைக்களங்கள் சுவீகரித்த காணிகள் தொடர்பான விவரம் தம்மிடம் இல்லையாம்

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் பதில்

வடமராட்சி, ஜன. 23

வன ஜீவராசிகள், வன பாதுகாப்பு, காரையோர பாதுகாப்பு திணைக்களங்களால் வடமராட்சி கிழக்கில் சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விவரம் எதுவும் தம்மிடம் இல்லை என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தக் காணிகள் தொடர்பான விவரங்களை குறித்த பிரதேச செயலகத்திடம் காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இ. முரளிதரன் கோரியிருந்தார். அவருக்கே எழுத்து மூலமாக மேற்கண்ட பதிலை வழங்கியுள்ளது.

தனியார், அரச காணிகளென பல ஏக்கர் காணிகளை வடமராட்சி கிழக்கில் வன ஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம் என்பவை பிடித்திருந்தன.

இந்தக் காணிகளை விடுவிக்குமாறு பல தடவைகள் ஒருங்கிணைப்பு கூட்டம் உட்பட பல கூட்டங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையிலேயே குறித்த திணைக்களங்களால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் குறித்த விவரம் தம்மிடம் இல்லை என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் பதிலளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.01.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், தை 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பொருளாதார எச்சரிக்கை

"இலங்கை அதன் நெருக்கடியை மறந்துவிடக்கூடாது - இலங்கையர்கள் அந்த நினைவுகளுடன் கடுமையாக உழைப்பதன் மூலமே எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்க முடியும்", என்று இந்திய அரசாங்கத்தின் முன்னைநாள் பொருளாதார ஆலோசகர் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குகொண்டு பேசுகின்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

வெளியிலிருந்து வரும் இவ்வாறான ஆலோசனைகளை இலங்கை எவ்வாறு எடுத்துக்கொள்ளும் என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் இல்லை. ஏனெனில், இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் விடயங்களில் - முக்கியமாக போருக்குப் பின்னரான பொறுப்புக் கூறல் விடயங்களில் வெளியிலிருந்து வழங்கப்பட்ட எந்தவோர் ஆலோசனைகளுக்கும் இலங்கை செவிசாய்க்கவில்லை. தென்னிலங்கை வெளியாரின் ஆலோசனைகளை உள்வாங்கிக் கொள்வதில் அக்கறையற்று இருக்கிறதா? அல்லது மற்றவர்கள் வழங்கும் ஆலோசனைகளை உள்வாங்கிச் செயல்படக்கூடிய வல்லமையுடன் ஆட்சியாளர்கள் இல்லையா?

ஒரு பொருளாதார வங்குரோத்து நிலையை எதிர்கொள்ளும் வரையில் அப்படியான ஒரு நெருக்கடி தங்களுக்கு ஏற்படும் என்பதை இலங்கையின் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, பொருளாதார நிபுணர்கள் என்போரும் முன்னுணரவில்லை. ஆகக் குறைந்தது அது தொடர்பிலான எச்சரிக்கைகூட இருந்திருக்கவில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடியொன்று ஏற்பட்டவுடன் அப்போதைய ஆட்சியாளரை நோக்கி அனைவரும் ஆவேசமாகத் திரும்பினர். இப்போதும் அவ்வாறானதொரு நிலைமையே காணப்படுகிறது. ஒருவேளை மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்பட்டால் - அது, தற்போது ஆட்சியிலிருப்பவர்கள்மீதான ஆவேசமாக மாறக்கூடும். ஆனால், விடயங்களின் சிக்கல்களை உணர்ந்து கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் செயல்படும் நிலையில் எவரும் இல்லை.

பொருளாதார மீட்சிக்கு இலங்கை ஸ்திரமாக இருக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இந்திய பொருளாதார நிபுணர் எச்சரித்திருக்கிறார். தொடர்ந்தும் சர்வதேச நாணய நிதியத்தில் தங்கியிருப்பதன் ஊடாக இலங்கை நிரந்தரமாக மீண்டு எழ முடியாதென்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையின்மை என்பது உள்ளக அரசியல் சிக்கல்களில் தங்கியிருக்கிறது. இன்றுவரையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை வழங்கும் நிலையில் தென்னிலங்கை சமூகம் இல்லை. இதில், கட்சிகளின் நிறங்கள் வேறுபடுகின்றனவே தவிர, அவர்களின் அடிப்படையான அரசியல் புரிதல் ஒன்றாகவே இருக்கிறது. தேசிய மக்கள் சக்தி மாறுபட்ட சொற்களின் வழியாகத் தங்களை முன்வைத்தாலும்கூட, இதுவரையில் முன்னேற்றகரமான அரசியல் நிலைப்பாடு எதனையும் முன்வைக்கவில்லை.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை என்பது தென்னிலங்கை அரசியலில் புரையோடிக் கிடக்கும் ஒரு விடயமாகவே தொடர்கிறது. தாங்கள் ஓர் அரசியல் ஸ்திரத்தன்மையை பேணிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக்கூட அவர்கள் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. தன்னைத் தாராளவாதியாகக் காண்பித்துக் கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டியது ஆட்சியாளர்களின் கடமை என்று கூறுகிறார் - இதனை ஏன் அவர் இப்போது கூற வேண்டும்? தேசிய மக்கள் சக்தி பௌத்தத்தை பாதுகாக்கும் கடப்பாட்டிலிருந்து விலகிச் செல்கிறது என்னும் கதையை முன்வைத்து, தேசிய மக்கள் சக்தியை எதுவும் செய்ய முடியாத நிலைக்குள் தள்ளுவதே நோக்கம். காலத்துக்குக் காலம் அனைத்து தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இதனைத்தான் செய்தனர். இது வாழையடி வாழையாகத் தொடர்கிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கை தொடர்ந்தும் அரசியல் ஸ்த்திரத் தன்மையற்ற நிலைக்கான வாய்ப்புடன் இருக்கிறது. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத சூழலில் பொருளாதார நெருக்கடிக்கான வாய்ப்பு நீறுபூத்த நெருப்பாகவே இருந்து கொண்டிருக்கும்.

# புதிய வருவாய் அணுகுமுறைகள் நோக்கி வங்கிகள் நகரவேண்டும்

### மத்திய வங்கி ஆளுநர்

*கொழும்பு, ஜன. 23*

இலங்கையிலுள்ள வங்கிகள் இனிவரும் காலங்களில் வெறும் நிதி இலாபத்தை மாத்திரம் நோக்கமாகக் கொள்ளாது, கற்றல் மூலம் வருவாய் என்ற புதிய அணுகுமுறையை நோக்கி நகர வேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

தேசிய வங்கி மற்றும் நிதி மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாரம்பரிய நிதி வருவாய் கணக்கீடுகள் இனி போதுமானதாக இருக்காது. தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கு தரவுத்திறன் மற்றும் புத்தாக்க சோதனைகளுக்காக வங்கிகள் மூலதனத்தை ஒதுக்க வேண்டும்.

டிஜிற்றல் மாற்றத்தை வெறும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கையாகப் பார்க்காது, வங்கியின் அடிப்படை நிதி மூலோபாயமாக கருத வேண்டும். காலநிலை அபாயங்கள் என்பவை நிதி அபாயங்களே. இவை வங்கிகளின் சொத்து மதிப்பு மற்றும் கடன் செயல்திறனை நேரடியாகப் பாதிக்கும் - என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)

## பூஸா சிறை கைதியிடமிருந்து போதைப்பொருள் கைப்பற்றல்

*கொழும்பு, ஜன. 23*

பூஸா அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் பாதாள உலக கும்பலை சேர்ந்த "மன்னா ரமேஷ்" என்பவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூண்டில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் போதைப் பொருள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, "மன்னா ரமேஷ்" என்பவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூண்டில் இருந்து ஒரு கிராம் ஹெரோயின் போதைப்பொருள், கைபேசிகள், 2 சிம் அட்டைகள், டேட்டா கேபிள் மற்றும் கைபேசி சார்ஜர் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## யானை தாக்கி மூதாட்டி பலி!

*கொழும்பு, ஜன. 23*

காட்டு யானை தாக்கியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். அவரின் மருமகள் காயமடைந்துள்ளார்.

அநுராதபுரம் எலயாபத்துவ பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு முற்றத்தில் நின்ற மரத்தில் மாமியாரும் மருமகளும் பூக்களை பறித்துக் கொண்டிருந்தனர். அப்போதே அங்கு வந்த காட்டுயானை அவர்களை தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதில், 91 வயதான மாமியார் உயிரிழந்தார். அவரின் மருமகள் காயமடைந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## சம்பிக்கவுக்கு எதிரான மனு நிராகரிப்பு!

*கொழும்பு, ஜன. 23*

2016ஆம் ஆண்டு இராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில், முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை தள்ளுபடி செய்யக் கோரி சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனு நேற்று வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை பராமரிப்பது சாத்தியமில்லை என்று மனுதாரரின் சட்டத்தரணியிடம் நீதியரசர்கள் அமர்வு சுட்டிக்காட்டியது.

இதன்படி, சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை நிராகரிப்பதாக நீதியரசர்களின் அமர்வு தீர்ப்பளித்தது. (ஐ)

## எம். பி.க்களின் ஓய்வூதியம் இரத்து; உயர்நீதிமன்ற விசாரணை நிறைவு


*கொழும்பு, ஜன. 23*

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வுதியத்தை இரத்து செய்வதற்காக அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தால் நேற்று நிறைவு செய்யப்பட்டது.

ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவால் இந்த மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள்மீதான நீண்ட விசாரணைகளைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றம் தனது இரகசிய தீர்மானத்தை விரைவில் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். பொறுப்புகளை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும்.

**இடபம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். கோரிக்கைகள் நிறைவேறும். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக்கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் ஆதரவுக் கிடைக்கும். தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களிடம் வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**விருச்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வேலையாட்கள் மதிப்பார்கள். மேலதிகாரி ஒத்துழைப்பார். மனசாட்சி படி செயல்பட வேண்டும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதம் வந்து நீங்கும். முன்னேறும் நாள்.

# குடத்தனையில் நேற்று காலை நேருக்கு நேர் மோதிக்கொண்ட 2 மோட்டார் சைக்கிள்கள்!

## மூவர் மந்திகை ஆதார மருத்துவமனையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம்- வடமராட்சி கிழக்கு குடத்தனை வலிக்கண்டி பகுதியில் நேற்றுக் காலை கோர விபத்து சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது

நேருக்கு நேர் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது

விபத்தில் காயமடைந்த மூவர் மந்திகை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



சம்பவ இடத்துக்கு வருகை தந்த மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-08)

# நெடுந்தீவு இறங்குதுறையை புனரமைக்க நெதர்லாந்து அரசு ஒத்துழைக்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 23

நெடுந்தீவுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. எனவே, அப்பிரதேச மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, நெடுந்தீவு இறங்குதுறையைப் புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு நெதர்லாந்து அரசாங்கம் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர்- இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் வீபே டி போர் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு, யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியில் கடந்த காலத்தில் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டைக்கு, தற்போது வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை விடவும் அதிகளவானவர்களை ஈர்க்க வேண்டும் எனத் தூதுவர் விருப்பம் வெளியிட்டார். இதற்கு பதிலளித்த ஆளுநர், “உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் யாழ்ப்பாணக் கோட்டையை மையப்படுத்திய சுற்றுலா மேம்பாட்டுக்கான விசேட அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன” என்பதை சுட்டிக்காட்டினார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் (கிளிநொச்சி, வவுனியா, மாங்குளம், பருத்தித்துறை ஆகிய இடங்களில்) அமைக்கப்பட்டுள்ள 4 மருத்துவமனைகளில், கிளிநொச்சி மருத்துவமனைக்கு தான் நேரில் சென்று பார்வையிட்டதாக தூதுவர் குறிப்பிட்டார். இந்த மருத்துவமனைகளை முழு அளவில் இயங்கச் செய்வதற்குத் தடையாகவுள்ள சவால்கள் குறித்தும் அவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

“வடக்கு முதலீட்டு உச்சிமாநாட்டில்” தான் கலந்து கொள்ள வுள்ளதாக தெரிவித்த தூதுவர், கொழும்பிலிருந்து வடக்கை நோக்கி முதலீட்டாளர்கள் நகர்ந்துள்ளமை ஒரு சிறப்பான மாற்றம் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர், “தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வடக்கில் முதலீட்டுக்கான மிகச் சாதகமான சூழல் நிலவுகின்றது. எமது மாகாணத்திலிருந்து விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்கள் மூலப்பொருட்களாகவே வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. இவற்றை இங்கேயே பெறுமதிசேர் பொருட்களாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகளே எமக்கு அவசியமாகின்றன” என வலியுறுத்தினார்.

மேலும், பனைசார் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்தும், குறிப்பாக பனையிலிருந்து புத்தாக்க முயற்சியாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் வைன் உற்பத்தி குறித்தும் ஆளுநர் எடுத்துரைத்தார். இம்முயற்சிகள் எதிர்காலத்தில் மாகாண பொருளாதாரத்தில் நேரான தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அண்மையில் வீசிய “டித்வா” புயலால் வடக்கில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், மாகாண நிர்வாக செயல்பாடுகள், மாகாண சபைத் தேர்தல், போதைப்பொருள் பாவனை விவகாரம் மற்றும் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேலும், பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பில், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் உறுதியளித்துள்ளமை வடக்கின் அபிவிருத்திக்குச் சாதகமான சமிக்ஞை எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் மற்றும் நெதர்லாந்துத் தூதரகத்தின் சிரேஷ்ட அரசியல் ஆலோசகர், கலாசார ஆலோசகர் ஆகியோர் பங்கேற்றனர்.

(எ-05)

சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்த

# வேலணையில் மிக முக்கிய இடங்களில் சி. சி. ரிவி கமரா பொருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 23

சட்டவிரோத செயல்பாடுகள், கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்த வேலணையில் நுழைவாயில் உள்ளிட்ட மிக முக்கிய இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, சமூகவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்படுவதாக தவிசாளர் அறிவித்தார்.

அண்மைக்காலமாக வேலணை பிரதேசத்தில் சமூகவிரோத செயல்பாடுகளும் சட்டவிரோத செயல்பாடுகளும் அதிகரித்து வருவதாக பல தரப்பட்டவர்களிடமிருந்தும் சுட்டிக்காட்டப்பட்டுவரும் நிலையில் அதற்கான நடவடிக்கையை எடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும், அத்தியாவசிய பிரச்னைகள், தேவைப்பாடுகள் குறிப்பாக குடிநீர், சுகாதாரம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் முக்கிய இடங்களில் சி. சி. ரிவி கண்காணிப்பு கமராக்களை பொருத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து சபையில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. அத்தோடு, சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

(எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் தலைமையிலான குழு இந்தியா பயணமாகின்றது



கொழும்பு, ஜன. 23

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் இந்தியா செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி இந்திய குடியரசு தின கொண்டாட்டங்களில் பங்கேற்கவே இந்தக் குழுவினர் இந்தியாவின் ஒடிசாவுக்கு பயணமாகவுள்ளனர்.

இந்தியா பயணமாகும் குழுவில் சித்ரால் பெர்னாண்டோ, சமித்ரினி கிரியெல்ல, சத்துரு கலப்பட்டி, பிரசாத் சிறிவர்த்தன, இந்திக அநுருத்த, சஞ்சீவ எதிரிமன்னே, சம்பத் அத்துக்கோரள அரசியல் குழு உறுப்பினர் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன், விஜயன் காலத்துக்குரிய பௌத்த தொல் பொருட்கள், ஒடிசா பேரிடர் முகாமைத்துவ மையம் என்பவற்றையும் பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுப்பயணம் தொடர்பான கலந்துரையாடல் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றுள்ளது. (ஐ)

# கடல் அலையில் அகப்பட்டு இளைஞர் மாயம்

கொழும்பு, ஜன. 23

கடல் அலை இழுத்துச் சென்றதில் 19 வயது இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

காலி - ஹிக்கடுவை - தொடந்துவ பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காணாமல்போனவர் ரத்கம பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவர், கடலில் நீராடிக் கொண்டிருந்த போது கடலலையில் அகப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவை பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# முறைகேடான சொத்து சேகரிப்பு; 65 பேருக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 23

முறைகேடான விதத்தில் சொத்துகளை ஈட்டிய 65 சந்தேகநபர்களுக்கு எதிராக இந்த ஆண்டில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் ஊடக பேச்சாளருமான எவ். யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - பத்தரமுல்லையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் வர்த்தகம், மோசடி உள்ளிட்ட குற்றச்செயல்கள் மூலம் முறையற்ற விதத்தில் ஈட்டப்படும் சொத்துகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு முதல் சொத்துக்குவிப்பு தொடர்பில் பொலிஸாரால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பணச் சுத்திகரிப்பு தடுப்பு சட்டத்துக்கமைய விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், இந்த வருடம் இது வரையான காலப்பகுதியில் மாத்திரம் 65 சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், 2024 மற்றும் 2025 ஆகிய இரு வருடங்களிலும் அவ்வாறு சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட 354 பவுண் தங்கம், 77 வாகனங்கள், 30 வீடுகள், 1197 பேர்ச்சஸ் காணிகள் மற்றும் 35 கோடியே 39 இலட்சம் ரூபாய் ரொக்கப்பணம் என்பன அரசுடமையாக்கப்பட்டுள்ளன அல்லது முடக்கப்பட்டுள்ளன. (ஐ)

# நெல் கொள்வனவு நடவடிக்கை 26ஆம் திகதி முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 23

எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையினூடான நெற்கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் கே.டீ.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக்கூட்டம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

# விபத்துகளில் இருவர் பலி!

கொழும்பு, ஜன. 23

கொழும்பில் இருவேறு விபத்துகளில் பெண் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

கொழும்பு - புறக்கோட்டை, பஸ்தியன் மாவத்தை தனியார் பஸ் நிலையம் அருகே நேற்று முன்தினம் வீதியை கடந்த பெண்ணை பேருந்து மோதியது.

இதில், படுகாயமடைந்த பெண் தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் யாசகர் என்று விசாரணைகளில் தெரிய வந்தது.

இதேசமயம், கொழும்பு - காலி வீதியில் இரத்மலானையில் பாதசாரி கடவையில் வீதியை கடந்தவரை பேருந்து மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். விபத்தில் உயிரிழந்தவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் அடையாளம் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த இரு விபத்துகளுடனும் தொடர்புடைய சாரதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# நெடுஞ்சாலைகளில் பயணிப்போர் ஆசனப்பட்டி அணிவது கட்டாயம்!

கொழும்பு, ஜன. 23

நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் சாரதிகள் மற்றும் பயணிகள் அனைவரும் ஆசனப்பட்டி அணிவதை கட்டாயப்படுத்தும் சட்டம் நூறு சதவீதம் அமுல்படுத்தப்படும் என்று பொலிஸ் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதற்கமைய, நெடுஞ்சாலைகளில் பிரவேசிக்கும் வாகனங்களின் சாரதிகள், அனைத்து பயணிகளும் ஆசனப்பட்டிகளை கட்டாயம் அணிய வேண்டுமென பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனாதீர வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், வாகன உரிமையாளர்கள் தங்களின் வாகனங்களில் ஆசனப்பட்டிகளை பொருத்தாவிட்டால் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும். பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த ஒழுங்குமுறை கடந்த முதலாம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விவசாயி சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜன. 23

வனப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரத்தில் மதவாச்சி - கரம்பன்குளம் வனப்பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், மதவாச்சி - துமின்கேம பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் கரம்பன்குளம் வனப் பகுதி அருகே மரதானி பயிரிட்டு வந்திருந்தார் என்றும் விவசாய நோக்கங்களுக்காக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் கடலரிப்பு தீவிரம்: உடனடி அரச நடவடிக்கை தேவை

## கோடீஸ்வரன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 23

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் காரைதீவு பிரதேசங்கள் கடலரிப்பில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கண்ணுக்கு தெரியும் இந்த அனர்த்தங்களை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அம்பாறை மாவட்டத்தில் கடலரிப்பினால் சில பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. திருக்கோவில், காரைதீவில் 200, 300 மீற்றர் கரையோரப் பகுதி கடலரிப்பில் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கண்ணுக்கு முன்னால் நடக்கும் அனர்த்தங்களை தடுக்க வேண்டும் என்று நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை, டித்வா புயல் நாட்டில் மிகவும் பாதிப்புகளை ஏற்படுத்திய அனர்த்தமாக விளங்கியது. அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களிலும் டித்வா புயல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அனர்த்தத்தின் பின்னர் 10 நாட்கள் வரையில் மின்சாரம் தடைப்பட்டும், தொலைத் தொடர்புகள் இன்றியும், வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையுமே இருந்தது. இந்த நேரத்தில் அனர்த்தத்தை தெரிவிப்பதற்கு எந்தவித வசதிவாய்ப்புகளும் இருக்கவில்லை.

இதனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக அனர்த்தம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியாத நிலை நிலவியது. ஆனால், அதிகாரிகளால் குறிப்பிட்ட காலக்கெடு விதிக்கப்பட்டு, அதற்குள் அனர்த்தம் தொடர்பில் அறிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பண்ணையாளர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். பண்ணைகளில் மாடுகள் இறந்த நிலையில் அவர்களுக்கு அது தொடர்பில் கால்நடை மருத்துவர் அல்லது அதிகாரிகளுக்கு அறிவிக்க வசதிகள் இருக்கவில்லை. இவ்வாறான நிலைமையில் அந்த மக்களுக்கு இதுவரையில் இழப்பீடுகள் கொடுக்கப்படவில்லை. ஆனால், தென்பகுதியில் கால நீடிப்புகள் வழங்கப்பட்டு பண்ணையாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் அவ்வாறு நிவாரணம் கிடைக்கவில்லை.

வீடுகள் பாதிக்கப்பட்டிருந்த போது அதனை புகைப்படம் எடுத்திருந்தீர்களா? என்று அதிகாரிகள் கேட்கின்றனர். ஆனால், அந்த நேரத்தில் மின்சார வசதி, தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத நிலைமையே காணப்பட்டது. இதனால், இந்த நிலைமையை கருத்தில்கொண்டு அந்த மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்”- என்றார்.(எ)

# திருகோணமலை- தம்பலகாமத்தில் வயல்களில் புதிர் எடுத்தல் நிகழ்வு



திருகோணமலை, ஜன. 23

பாரம்பரிய முறையை பறைசாற்றும் வகையில் வயல்களில் புதிர் எடுத்தல் நிகழ்வு தம்பலகாமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் (காணி) தம்பலகாமம் பிரதேச பதில் பிரதேச செயலாளருமான ஜெ. சிறீபதி தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச வயல் நிலப் பகுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, பண்டைய முறைப்படி அறுவடை நிகழ்வு நடைபெற்றது.

இதில், தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன் உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ-12)

# நுவரெலியாவில் கடும் குளிர்!

நுவரெலியா, ஜன. 23

நுவரெலியாவில் நேற்று குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது. இது 3. 5 பாகை செல்சியஸாக காணப்பட்டதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிராந்திய தரவு சேகரிப்பு நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் படி, அண்மைக்காலத்தில் பதிவான மிகக் குறைந்த வெப்பநிலை இதுவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏனைய பிரதேசங்களில் பதிவான வெப்பநிலை விவரம் வருமாறு:

பண்டாரவளை: 11.5 பாகை செல்சியஸ்,

பதுளை: 15.1 பாகை செல்சியஸ்,

கட்டுகஸ்தோட்டை: 15.9 பாகை செல்சியஸ்,

இதேவேளை, அதிகபட்ச வெப்பநிலையாக முல்லைத்தீவில் 25.3 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது. அம்பாந்தோட்டையில் 22 பாகை செல்சியஸாகவும் கொழும்பில் 22.1 பாகை செல்சியஸாகவும் வெப்பநிலை பதிவாகியிருந்தது. (எ)

# பதுளை மத்திய கல்லூரி அருகில் மண்சரிவு அபாயம்

பதுளை, ஜன. 23

பதுளை - சொரணாத்தோட்டை மத்திய கல்லூரிக்கு அருகில் மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால், ஆபத்திலுள்ள இரண்டு மாடி கட்டடத்தை தடைசெய்யப்பட்ட பகுதியாக மாற்றவும் மற்றைய கட்டடங்களில் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலையின் மைதானத்தின் ஒரு பகுதியிலும் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வின்படி, இந்தப் பகுதியை ஒரு சரியான அணைக்கட்டு கட்டப்பட்டு நிலைப்படுத்தப்படும் வரை தற்காலிகமாக மூட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண கல்வி பணிப்பாளர் மனோகரி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த பாதுகாப்பு அணையை நிர்மாணிப்பதற்காக 05 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பணியை விரைவாக மேற்கொண்டு மாணவர்களின் கல்வியை எளிதாக்குமாறு பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கிழக்கு மாகாணத்தை பாதுகாக்க விஞ்ஞான வேலைத்திட்டம் அவசியம்

## ஹக்கீம் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

கடலரிப்பால் கிழக்கு மாகாணம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகிறது. அதனால், அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தி, அங்கு எஞ்சியிருக்கும் நிலங்களை பாதுகாத்துக்கொள்ள விஞ்ஞான ரீதியில் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இயற்கை அனர்த்தத்தில் கடலரிப்பு விவகாரம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் மிக மோசமாக பாதித்து வருகிறது. நிந்தவூர் பிரதேசம் மோசமாக பாதிக்கப்பட்டு, தற்போது மல்லிகைக்காடு, கல்முனை பிரதேசமும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தான், சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற சாய்ந்தமருது மல்லிகைக்காட்டு பிரதேசத்தின் மையவாடிக்கு மாற்றுக்காணியை பெற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் மற்றும் இருக்கின்ற மையவாடியை பாதுகாத்துக் கொள்கின்ற அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறோம். ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்டதன் பிரகாரம் கடலோர பாதுகாப்பு திணைக்களம் இதற்காக 20 மில்லியன் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அறியக்கிடைக்கிறது. அதனால், அந்த 20 மில்லியன் ரூபாயை வைத்துக்கொண்டு நிந்தவூரில் இருந்து கல்முனை கடற்கரை பள்ளிவாசல் வரையும் திருக்கோவிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கும் இவற்றை எப்படி பாதுகாப்பது என்ற பிரச்னை இருக்கிறது. அதனால் இந்த தொகையை கூட்டித்தர வேண்டும் என்பது மாத்திரமல்லாது, நிரந்தர பாதுகாப்பு அணை ஒன்றை அமைக்க வேண்டும்”- என்றார். (எ)

# மலையக மக்களுக்கு காணியுடன் வீடுகளை பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் திட்டம்

## முதற்கட்டமாக 7,000 வீடுகள் - பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

கொழும்பு, ஜன. 23

மலையக மக்களுக்கு சொந்தமாக 10 பேர்ச் காணியுடன் வீடுகளை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். இதன் முதற்கட்டமாக இந்த வருடத்தில் மலையக மக்களுக்கு 7,000 வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படும் என்று பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த ஆட்சியை மாற்றுவதற்கு ஏதாவது வழி கிடைக்காதா? என்ற நிலையில் எதிர்க்கட்சியினர் எதை எதையோ தெரிவித்து வருகின்றனர். அதற்கான உபாய மார்க்கங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு காலத்தில் இனவாதத்தை வைத்து அரசியல் செய்த இவர்கள், மக்களைப் பிளவு படுத்தினார்கள். இப்போது அந்த அரசியல் எடுபடவில்லை.

டித்வா சூறாவளி அனர்த்த செயல்பாடுகளில் இடம்பெற்றுள்ள சிறு சிறு தவறுகளை வைத்து இவர்கள் அரசியல் செய்வதைக் காண முடிகிறது.

நாட்டு மக்கள் மிகவும் தெளிவாகவுள்ளனர். இந்த நாடு ஒரு சிறந்த தலைவனைக் கண்டிருக்கின்றது. ஜனாதிபதி மக்களோடு மக்களாக இருக்கின்றார். ஜனாதிபதியும் அரசாங்கமும் வழங்குகின்ற ஆறுதல் மக்களுக்கு பெரிதாகவுள்ளது.

இவ்வாறான அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என்று எதிர்க்கட்சியினர் நினைத்தால் அது வெறும் பகல் கனவே.

எதிர்வரும் 5 வருடங்கள் மட்டுமல்ல. தொடர்ந்தும் இந்த அரசாங்கமே ஆட்சியில் இருக்கும். எதிர்க்கட்சிக்கு மலையக பிரதேசங்களிலேயே சற்று வாக்குப் பலம் இருந்தது. இப்போது அதுவும் இல்லாமல் போய்விட்டது. அவர்கள் இனி மலையகப் பகுதிக்கு வாக்குக் கேட்டு செல்ல முடியாது.

தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு கிடைக்காது என்று தெரிவித்தனர். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,750 ரூபாய் சம்பளம் கிடைக்கவுள்ளது. அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியின் படி அதனைப் பெற்றுக் கொடுத்துள்ளது. ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு அதனை பெற்றுக் கொடுப்பதை தடுப்பதற்கு எதிர்க்கட்சியினர் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

சூறாவளி அனர்த்தத்தில் மலையகப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எமது மக்கள் வீடுகளை இழந்து இன்னும் கூட சிலர் பாதுகாப்பாக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மலையகப் பிரதேசங்களில் காணிகள் இனங்காணப்பட்டு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கைக்கு இணங்க மலையக மக்களுக்கு சொந்தமாக 10 பேர்ச் காணியுடன் வீடுகளும் நிர்மாணித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் முதற்கட்டமாக 7,000 வீடுகளை நிர்மாணித்து மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இயற்கை அனர்த்தங்களின் பின்னர் உலக நாடுகளின் தலைவர்கள், குறிப்பாக இந்தியப் பிரதமர், தமிழக முதல்வர் உட்பட பலரும் எமக்கு உதவி செய்தார்கள். புலம்பெயர்ந்த மக்களும் உதவி செய்தார்கள்”- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 ஆயிரம்...

தொடர்பில் 11 ஆயிரம் முறைப்பாடுகள் இதுவரை இந்த பணிமனைக்கு கிடைத்துள்ளன. 5 ஆயிரம் முறைப்பாடுகளின் விசாரணைகள் இந்த ஆண்டு நிறைவடையும். அனைத்து முறைப்பாடுகளின் விசாரணைகளும் அடுத்த இரு ஆண்டுகளுக்குள் நிறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

முறைப்பாடுகளை விசாரிப்பதன் முதன்மை நோக்கம் காணாமல் போனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது மட்டுமல்ல. அவர்கள் தங்கள் உயிருக்கு நீதியை விரும்புகிறார்கள். போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. அவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பிறகு, தேவைப்பட்டால் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். கடந்த காலங்களில் ஏற்பட்ட வலிகளைத் தவிர்த்து, இந்த மக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

**கேள்வி** - புதைகுழிகள் ஆய்வு தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? இவை தொடர்பில் டி.என்.ஏ சோதனைகள் குறித்தும் விவாதங்கள் உள்ளன. இது குறித்த கருத்து என்ன?

**பதில்** - இந்தப் புதைகுழிகள் ஆய்வு தொடர்பாக நாங்கள் சிறப்பு ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறோம். தேவையான ஏற்பாடுகளை முறையாக வழங்கவும் இந்த ஆய்வுகளை வெளிப்படையாக நடத்தவும் நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாடுகளிலிருந்து அறிவியல் உதவிகளை பெற்று தேவையான விசாரணைகளை நடத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவர்கள் தங்கள் அன்புக்கு உரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். விசாரணைகளின்போது தவறு செய்தவர்களைத் தெரிய வந்தால், அவர்களை தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் டி. என். ஏ. மற்றும் பிற தொழில்நுட்ப ஆய்வகங்களை பெறவும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**கேள்வி** - இந்த விசாரணைகள் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக மட்டுமே நடத்தப்படுகின்றனவா? தெற்கில் காணாமல் போனவர்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுகின்றனவா?

**பதில்** - வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் குறித்து மட்டுமல்ல. தெற்கிலும் காணாமல் போனவர்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. பயிற்சிகளுடன் தெற்கிலும் விசாரணைக் குழுக்கள் நிறுவப்படுகின்றன. 1988-89 இல் நடந்த காணாமல் போனவர்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் ஒரு பிரிவு இருக்கக்கூடாது. விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் - விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

**கேள்வி** - தற்போதைய சட்டமா அதிபரை பதவி நீக்கம் செய்வது குறித்து சமூக ஊடகங்களில் பல்வேறு கதைகள் பரவி வருகின்றன. நீதி அமைச்சர் என்ற முறையில் உங்கள் கருத்து என்ன?

**பதில்** - தற்போதைய சட்டமா அதிபரை பதவியில் இருந்து நீக்குவது குறித்து பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சமூக ஊடகங்களில் எந்த வகையான அறிக்கைகள் வெளியிடப்பட்டாலும் சட்டமா அதிபரை பதவி நீக்கம் செய்வது குறித்து அமைச்சரவையில் எந்த விவாதமும் நடத்தப்படவில்லை. சட்டமா அதிபர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சமூக ஊடகக் கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவர் நீக்கப்பட வேண்டும் என்று சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. சட்டமா அதிபரை மட்டுமல்ல, நீதி அமைச்சரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று சில சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன. இதைத்தான் நான் சொல்ல வேண்டும். நீதி அமைச்சர் அல்லது வேறு யாரையாவது பற்றி முறைப்பாடுகள் இருந்தால், இந்த நாட்டில் உள்ள சட்டம் அனைவருக்கும் சமமாகப் பொருந்தும். நீங்கள் முறைப்பாடு செய்யலாம். சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் விசயங்களுடன் அரசாங்கத்துக்கு எந்த தொடர்பும் இல்லை. சட்டமா அதிபரை நீக்குவது அல்லது பதவி நீக்கம் செய்வது குறித்து அமைச்சரவையில் எந்த விவாதமும் இல்லை (ஐ)

## கிவுல்...

அமுலாக்கலைத் தடுக்கும் வகையில் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நாம் நடத்தவுள்ளோம். இந்தப் போராட்டங்களில் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு மற்றைய கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறோம். அடுத்தடுத்த நாட்களில் இது சம்பந்தமான கலந்துரையாடல்களை வவுனியாவில் நாம் நடத்தவுள்ளோம். இதில் கலந்துகொண்டு உங்களது கருத்துக்களையும் பகிர்ந்து - இந்தப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்குமாறு சகலரையும் கேட்டுக்கொள்கிறோம்." - என்றுள்ளது. (ஐ)

## அரசமைப்பு...

தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் சிறுபான்மை அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி அரசமைப்பு பேரவையின் உறுப்பினராக பதவி வகிக்கிறார். அரசாங்கம் கொண்டு வந்த தவறான நியமனங்களுக்கு சிறீதரன் அரசமைப்பு பேரவையில் ஆதரவளித்துள்ளார். அரசாங்கம் கொண்டு வரும் அனைத்து முன்மொழிவுகளுக்கும் இவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

சிறீதரனின் செயல்பாடுகள் பெரும் பிரச்னையாக காணப்படுகிறது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நியமனத்துக்கும் ஆதரவளித்துள்ளார். பாராளுமன்ற ஒழுக்கக் கோவையின் பிரகாரம் இவர் விடயங்களை பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்தவில்லை. இவருக்கு எதிராக தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பூநகரி புதுப்பிக்கத்தக்க சக்தி வலு திட்டம் தொடர்பில் சிறீதரன், சிறீதரன் சாரங்கன் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு பேரவையில் இருந்து விலகுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சிறீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளது, ஆனால், அவர் பதவி விலகவில்லை.

சிறுபான்மை கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு அரசாங்கத்துக்கு சார்பாக செயல்படுவது சிறீதரனின் கடமை அல்ல. உண்மையில் இவர் சுய அடிப்படையில் பதவி விலக வேண்டும். இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் உள்ளன. அரசாங்கத்துக்கு சார்பாக செயல்பட்டுக்கொண்டு தனது தனிப்பட்ட பிரச்னைகளை இவர் தீர்த்துக் கொள்கிறார். அதேபோல், வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்கிறார். வடக்கு மக்களின் உரிமைகளுக்கு எதிராகவும் சிறீதரன் செயல்பட்டுள்ளார். ஆகவே, சிறுபான்மை அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டு அரசமைப்பு பேரவையில் பதவி வகிக்க சிறீதரனுக்கு எவ்வித தகுதியும் கிடையாது. ஆகவே, அவர் உடன் பதவி விலக வேண்டும் - என்றார். (ஐ)

## அரச...

பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், மகப்பேறு, சிறுவர்கள் மருத்துவமனைகள், சிறுநீரக, புற்றுநோய் மருத்துவமனைகளில் பணிப்புறக்கணிப்பு நடைபெறாது என்றும் கூறப்பட்டுள்ளது.(ஐ)

## வட, கிழக்கில்...

காலநிலை அவதானிப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் சிறிய அளவிலான வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இது வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்கிறது. இதன் காரணமாக இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு, ஊவா, மத்திய, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கு பரவலாக மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கக்கூடும்.

எனவே, நெல் அறுவடை செயல்பாடுகளில் ஈடுபடும் விவசாயிகளும் நெல் உலர விடும் விவசாயிகளும் இந்த மழை நாட்களைக் கருத்தில் கொண்டு செயல்படுவது சிறந்தது.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளில் மாலையில் அல்லது இரவில் நிலவும் குளிரான வானிலைக்கு காரணமான அதிகுறைந்த வெப்பநிலை எதிர்வரும் 27ஆம் திகதி வரை சற்று உயர்வடையும் என்பதனால் குளிர் நிலைமை சற்று சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மீண்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு சற்று மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## யாழ்...

மருத்துவர் நிஹால் அபேசிங்கே தலைமையில் நடந்த கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜயசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவ நிபுணர்கள், யாழ். மருத்துவ பீடாதிபதி குழுவினர் கலந்து கொண்டு, மருத்துவமனையின் தற்போதைய நிலைமை மற்றும் சேவைகள் குறித்து விரிவாக விளக்கினர்.

ஆளணி பற்றாக்குறை காரணமாக மருத்துவமனை எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இதற்குத் தீர்வாக, எதிர்வரும் காலங்களில் தேவையான சுகாதார ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்பார்வைக் குழு உறுதி அளித்தது.

அத்துடன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை நான்காவது தேசிய மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும் இதன்போது தீர்மானமும் எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-05)

## அனகொண்டா...

நடைமுறைப்படுத்தியபோது, எதிர்க்கட்சியினர் அரங்கேற்றிய நாடகத்தையே அவர் "அனகொண்டா - 1" திரைப்படத்துடன் ஒப்பிட்டார்.

மேலும், "அனகொண்டா 1 மற்றும் 2 ஆகிய இரண்டு பாகங்களையும் அரசியல் களத்தில் பார்க்கும் காலம் வந்துவிட்டது. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வந்த பின்னர் அனகொண்டா 2 படத்தின் கதையை அனைவரும் பார்த்துக்கொள்ளலாம் - என்றார்.

எதிர்க்கட்சியின் நகர்வுகள் தோல்வியடையும் என்பதையே இந்த உருவகங்கள் மூலம் அவர் குறிப்பிட்டிருந்தார். (ஐ)

## திருமலை...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலாங்கொடை கஸ்ஸப தேரர், திருகோணமலை கல்யாண வங்ச திஸ்ஸ தேரர் ஆகியோரை விடுதலை செய்யுமாறும் - அவர்களின் விளக்கமறியல் உத்தரவை வலுவற்றதாக்கக் கோரியும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் நேற்று வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் நீதியரசர் ரொஹந்த அபேசூரிய, நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரடங்கிய அமர்வின் முன்பாக விசாரணைகள் நடைபெற்றன.

சம்பந்தப்பட்ட தரப்பினரின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதியரசர்களின் அமர்வு இந்த மனுக்கள் மீதான தீர்ப்பை எதிர்வரும் மாதம் 30 ஆம் திகதி அறிவிப்பதாக கட்டளை பிறப்பித்தனர். (ஐ)

## மண்மேடு...

மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டடம் ஒன்றை கட்டிக் கொண்டிருந்தவர்கள் மீதே மண்மேடு சரிந்து விழுந்தது. இதில், அங்கிருந்த மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று அஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

மண்மேடு இடிந்து விழுந்தமைக்கான சூழ்நிலைகளை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சைக்கிளில்...

மயக்கமடைந்தார்.

உடனடியாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## சர்வதேச...

ஆய்வு, மறுவடிவமைப்பு. மீள்நிர்மாணம் எனும் தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உட்பட உள்நாடு, வெளிநாடுகளை சேர்ந்த சட்ட அறிஞர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளைய நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதியரசர் சி. துரைராஜா, கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவர் நீதிபதி ரொஹந்த அபேசூரிய ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், பிரதம உரையாளர்களாக இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் நிர்வாக இயக்குநர் கலாநிதி மரியோ கோமெஸிம், பாரிஸ்டர் ஸாரா மண்டிவல்லா அக்பரால்ட் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த மாநாட்டையொட்டி யாழ். மண்ணின் பண்பாட்டு சுவடுகளை பிரதிபலிக்கும் நிகழ்வு மாலை 6 மணி முதல் 9 மணி வரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

மாநாட்டின் இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட, கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிராங்க் குணவர்த்தன ஆகியோர் பங்கேற்பர்.

இதன்போது, சிறப்புரைகளை ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன், பேராசிரியர் சாந்தி செகராஜசிங்கம் ஆகியோர் ஆற்றுவர். தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும் (ஐ-03-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தீர்மானங்களை இயற்றும் செயல்முறைகளில் பெண்கள் புறக்கணிக்கப்படுவது தற்செயலானதல்ல

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜன. 23

தீர்மானங்களை இயற்றும் செயல் முறைகளிலிருந்து பெண்கள் புறக்க ணிக்கப்படுவது தற்செயலான ஒன் றல்ல. மாறாக, பாலின அடிப்படை யிலான அதிகார படிநிலைகளின் ஊடாக கட்டமைப்பு ரீதியாக பேணப்பட்டு வரும் ஒரு நடைமு றையாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நக ரில் நடைபெறும் உலகப் பொருளா தார மன்றத்தின் 56ஆவது வருடாந்த கூட்டத்துக்கு சமாந்தரமாக வேர்ள்ட் வுமன் கௌன்சில் நடந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், அரசியல், பொருளா தார மற்றும் சமூகத் துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வரும் போதிலும், அவர்களது



உழைப்பு - குறிப்பாக ஊதியமற்ற பராமரிப்புப் பணிகள், முறைசாரா தொழில் மற்றும் விவசாயத் துறை கள் தொடர்ச்சியாக குறைத்து மதிப் பிடப்படுகிறது.

அரசியல் கண்ணோட்டத்தில், தீர்மானங்களை எடுக்கும் செயல்மு றைகளிலிருந்து பெண்களை விலக் குவது திட்டமிட்ட, கட்டமைப்பு ரீதியான செயல்பாடாக இருக்கிறது. அரசியலில் பெண்கள் எதிர்கொள் ளும் துன்புறுத்தல்கள், தன்மைப் படுகொலை, திட்டமிட்ட ஓரங்கட் டல்கள் போன்றவை, தலைமைத்து வத்திற்குத் தகுதியான பல பெண் களை அரசியலில் இருந்து விலகச் செய்கிறது.

இவ்வாறான செயல்கள் ஏற்க னவே நிலவி வரும் ஆணாதிக்க அதி காரக் கட்டமைப்புகளை மேலும் பலப்படுத்துகின்றன. எதிர்கால உலக ஒழுங்கை வடிவமைக்கும் கொள்கைகளில், பெண்களும் சமூ கத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களும் வெறும் பங்காளர்களாக மட்டுமன்றி, அதன் முதன்மை வடிவமைப்பாளர் களாக இருப்பதை உறுதி செய்யு மாறு உலகளாவிய தரப்பினருக்கு அவர் இதன்போது அழைப்பு விடுத் தார். (ஐ)

# புத்தரின் புனித சின்னங்களை பெப். 04 -ı வரை தரிசிக்கலாம்

கொழும்பு, ஜன. 23

இந்திய அரசாங்கத்தின் முழு அனுசரணையுடன் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ள "புத்த பெருமா னின் புனித சின்னங்கள்" தரிசனம் எதிர்வரும் பெப்ரவரி 04ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை ஏழு நாட்கள் கொழும்பு - ஹுனுப்பிட்டி கங்காராமை விகாரையில் நடைபெறும்.

இது தொடர்பான ஏற்பாட்டு கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, ஜனாதிபதியின் செயலா ளர் நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த இட மான குஜராத்தில் 1960களில் நடந்த அகழ்வாராய்ச்சி யின்போது கண்டுபிடிக்கப்பட்ட புத்த பெருமானின் உடல் சார்ந்த புனித சின்னங்கள் இதுவரை இந்தியாவுக்கு வெளியே கொண்டு செல்லப்படவில்லை. இந்த நிலை யில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அண்மைய இலங்கை வருகையின்போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் விளைவாக.இந்த புனித சின்னங்கள் இலங்கை வரவுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒன்றரை கிலோ ஐஸ்டன் சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜன. 23

ஒரு கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொரு ளுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - மாதம்பிட்டி - சத்திரு செவன அடுக்கு மாடி குடியிருப்பு பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள், 24, 29 வயதுடைய வர்கள் என்றும் வெல்லம்பிட்டி, கொழும்பு 15 பகுதி களை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு கிலோ 501 கிராம் ஐஸ் போதைப்பொருள், மின்னணு தராசு, 18 ஆயிரம் ரூபாய் பணம் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று மாதம் பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் வேலைநிறுத்த போராட்டம் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 23

அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத் தினர் நேற்றுமுன்தினம் முதல் நேற்று வரை முன்னெடுக் கவிருந்த பணிபுறக்கணிப்பு 7 நாட்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு சுகாதார பிரதி அமைச்சரு டன் நடைபெற்ற முக்கிய பேச்சின்போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

மாளிகாவத்தை சிறுநீரக மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மேற்கொண்டதாகக் கூறப்படும் சட்டவி ரோத மற்றும் ஒழுக்கமற்ற செயல்பாடுகள் குறித்து ஏற்கனவே துரித விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது அமைச்சு உறுதியளித்துள்ளது.

சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஒரு வார காலத் துக்குள் பக்கச்சார்பற்ற விசாரணைக்குத் தேவையான சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உடன்பாடு எட்டப்பட்டது.

சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப் பைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய ஊடக அறிக்கை தொடர்பிலும் உடனடி விசாரணை நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

வாக்குறுதி அளிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இந்த இணக்கப்பாடுகள் நிறைவேற்றப்படாவிட்டால், மீண் டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு போராட் டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக கதிரியக்க தொழில்நுட்ப வியலாளர்கள் சங்கத்தின் நிறைவேற்று சபை எச்சரித்துள் ளது.

சுகாதாரத் துறையில் இவ்வாறான முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங் கும் அதிகாரிகளுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# துருக்கியே சந்தை வாய்ப்பை இலங்கை தேயிலை இழக்கிறது


## அந்த நாட்டின் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

இலங்கை தேயிலையின் விலை உயர்வாக இருப்பதால் துருக்கியே நாட்டில் சந்தை வாய்ப்பு இழக்கப்ப டுகிறது. இலங்கையின் சந்தை வாய்ப்பை கென்யா கைப்பற்றி வரு கிறது என்று இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமிஹ் லுட்பு டர்கட் தெரிவித்துள்ளார்.

பாத் பைன்டர் அமைப்பு ஏற் பாடு செய்த துருக்கியே தூதுவரு டனான வட்டமேசை கலந்துரை யாடல் நேற்றுமுன்தினம் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடை பெற்றது. இதிலேயே அவர் மேற் படி விடயங்களை தெரிவித்தார்.

இலங்கை தேயிலைக்கு துருக் கியே மக்களிடம் பெரும் வரவேற்பு உள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தகவல்களின்படி இலங்கை 2024ஆம் ஆண்டில் 94 மில்லியன் டொலர்களுக்கு துருக்கி யேக்கு தேயிலை ஏற்றுமதி செய் துள்ளது. இது, 2023 உடன் ஒப் பிடும்போது 30 சதவீதம் குறைவா கும். இந்த நிலையிலேயே துருக்



கியே தூதுவர் மேற்கண்ட விட யத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், "இலங்கை மற்றும் துருக் கியே இடையிலான வர்த்தகத்தில் தேயிலை முக்கிய பங்கு வகிக்கிறது. எனினும், இலங்கை தேயிலையின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், துருக்கியே சந்தையை இலங்கை மெல்ல மெல்ல இழந்து வருகிறது. இலங்கை தேயிலை செலவுமிக்கதாக மாறி வருகிறது. இதனால் இலங்கைக்கு சொந்தமான அந்த சந்தை வாய்ப்பை தற்போது கென்யா கைப்பற்றி வருகிறது. இது இரு தரப்பு வர்த்தக உறவில் ஒரு எதிர்மறையான போக்காகும்" -என் றார்.

இதேநேரம், இலங்கையின் முத லீட்டுக்கான சூழல் தொடர்பில் கருத்துரைத்த அவர், இலங்கையின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சூழல் கடினமானது. மற்ற பிராந்திய நாடு களுடன் ஒப்பிடும்போது இலங்கை யின் சந்தை சிறியதாகவுள்ளது. இரண் டாவதாக, அதிகாரத்துவம் சிக்க லானதாகவுள்ளது. அது நேரத்தை எடுக்கும். மேலும் அதிகரித்து வரும் பிரச்னையும் ஒன்றும் உள்ளது. அதாவது உங்கள் திறமையான மனி தவளம் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறது. எனவே எதிர் காலத்தில், ஒருவேளை மிக நெருக்க மான எதிர்காலத்தில், மக்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதன் காரண மாக இலங்கையில் நீங்கள் தொழி லாளர் பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடும்" - என்றும் கூறினார். (ஐ)

# துப்பாக்கிச்சூடுகளை நடத்திய 44 சந்தேகநபர்கள் கைதாகினர்




கொழும்பு, ஜன. 23

கடந்த ஆண்டு 114 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதி வாகின. இந்தச் சம்பவங் களுடன் தொடர் புடைய 44 சந் தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரி வித்துள்ளார்.

கடந்த ஆண்டில் துப்பாக்கிச்சூடு தொடர்பான குற் றங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன. இது முந்தைய ஆண் டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் உயிரிழப்புகளை விட அதிகமாகும். நாடு முழுவதும் பதி வான 114 துப்பாக்கிச் சூடுகளில் 60 பேர் உயிரிழந்தனர். 57 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸாரின் புள்ளிவி வரங்கள் காட்டுகின்றன.

துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட கடுமையான குற்றங்களு டன் தொடர்புடைய 385 சந்தேக நபர்கள் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டனர். இவர்களில் 44 பேர் துப்பாக் கிச் சூடுகளை நடத்தியவர்கள், 34 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களாக செயல்பட்டவர்களாவர்.

2024ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டில் பொலிஸாரின் நடவடிக்கைகள் கணிசமாக தீவிரப்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கடந்த ஆண்டு 75 ரி -56 துப்பாக்கிகள், 88 கைத்துப்பாக்கிகள், 62 ரிவால்வர்கள் கைப்பற்றப்பட் டன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரி வித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.